# யூன் – 20 - செவ்வாய்

**புனித சில்வேரியுஸ்**

**உங்கள் விண்ணகத் தந்தை நிறையுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறையுள்ளவர்களாய் இருங்கள்." மத்.5:48**

## முதல் வாசகம்: 2 கொரிந்தியர் 8 : 1 – 9

சகோதர சகோதரிகளே, மாசிதோனியத் திருச்சபை களுக்குக் கடவுள் கொடுத்த அருளைப்பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறோம். அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்ட போதும் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள். அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்குத் தாங்களாகவே கொடுத்தார்கள். ஏன், அளவுக்கு மீறியே கொடுத்தார்கள். இதற்கு நானே சாட்சி. இறைமக்களுக்குச் செய்யும் அறப்பணியில் பங்குபெறும் பேறு தங்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக அவர்கள் தங்களை முதன்மையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்கள் நாங்கள் கடவுளின் திருவுளப்படி செயல்படுவதால், எங்களுக்கும் தங்களை அர்ப்பணித்தார்கள். எனவே இந்த அறப்பணியைத் தொடங்கிய தீத்துவே அப்பணியை முடிக்க வேண்டும் என நாங்கள் அவரை வேண்டிக் கொண்டோம். நம்பிக்கை, நாவன்மை, அறிவு, பேரார்வம் ஆகிய அனைத்தையும் மிகுதியாய்க் கொண்டிருக்கிறீர்கள். எங்கள் மேல் நீங்கள் கொண்டுள்ள அன்பும் பெருகிக்கொண்டு வருகிறது. அதுபோல் இந்த அறப்பணியிலும் நீங்கள் முழுமையாய் ஈடுபட வேண்டும்., நான் இதை உங்களுக்கு ஒரு கட்டளையாகச் சொல்லவில்லை. மாறாக, பிறருடைய ஆர்வத்தை எடுத்துக் காட்டி உங்கள் அன்பு உண்மையானதா எனச் சோதிக்கவே இவ்வாறு செய்கிறேன். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்.

**பதில்பாடல் :** என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு

## நற்செய்தி: மத்தேயு 5 : 43 – 48

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக ", "பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக் கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். "இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" என்றார்.

**தியானம்:** இன்று மனித உறவுகள் சிதைந்து காணப்படுகின்றன. எங்கு நோக்கினும் பகைமையும், வெறுப்பும், சண்டை சச்சரவுகளும் மனித உறவுகளைக் காயப்படுத்தி பிரித்து வைத்திருக்கும் நிலையைப் பார்க்கின்றோம். மனித உறவுகளில் காணப்படும் பகைமை உலக நாடுகளிடையேயும், சமூகத்திலும் வெளிப்படையாகத் தெரிகின்றது. இந்தக் காயப்பட்ட சமூகத்தை தமது அன்பினால் குணப்படுத்தி கட்டியெழுப்பவே கடவுள் தன் ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பி வைத்தார். "நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பி வைத்தார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (1யோவா.4:9). இயேசு தான் வாழ்ந்த காலத்தில் கடவுளின் விடுதலை அளிக்கும், குணப்படுத்தும் வல்லமையை உலக மக்களுக்கு வெளிப்படுத்திச் சென்றார். இதையே நாம் திருத்தூதர் பணிகள் நூலில் பின்வருமாறு வாசிக்கின்றோம், "கடவுள் நாசரேத்தூர் இயேசுவின்மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் விடுவித்து நன்மை செய்து கொண்டே சென்றார்" (தி.ப.10:38). கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம் நன்மைகள் செய்ய படைக்கப்பட்டிருக்கின்றோம். ஆகவே இருளின் ஆட்சிக்குரிய வெறுப்பு, பகைமை, சண்டை சச்சரவுகள், கோபம் போன்ற செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களான அன்பு, அமைதி, பொறுமை, தெய்வபயம் போன்றவற்றை அணிந்து கொள்வோமாக. "இயேசுக்கிறீஸ்துவை அணிந்துகொள்வோமாக" (உரோ. 13:12,14). ஆகவே தந்தையின் குணங்களை ஆண்டவர் இயேசு இந்த உலகில் வாழ்ந்து காட்டியதைப் போல இயேசுவை உற்றுநோக்கி அவரைப்போல வாழ நாமும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். "நாம் சகோதர அன்பு கொண்டுள்ளதால் சாவிலிருந்து வாழ்வுக்கு கடந்து வந்துள்ளோமென அறிந்துள்ளோம். அன்பு கொண்டிராதோர் சாவிலேயே நிலைத்திருக்கின்றனர். தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள். எந்தக் கொலையாளியிடமும் நிலைவாழ்வு இராது என்பது உங்களுக்குத் தெரியுமே!" (1யோவா.3:14-15). மனிதர்களைப் போல நாம் சிந்திக்காமல் இயேசுவைப்போல் சிந்திப்போம். நம் உடன்வாழும் சகோதர சகோதரிகளிடம் வெறுப்பையும், பகைமையையும் காட்டாமல் இறைவனின் அன்பை, மன்னிப்பை, இரக்கத்தை காட்ட இயேசுவை நம்முடைய முன்மாதிரியாக வைத்துச் செயல்படுவோம்.